**இபலோகம பிரதேச சபை**

**அநுராதபுர மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

--------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 03 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இபலோகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 2,163,094 தொகை செலவு செய்து மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த வாகன நிறுத்துமிடத்தின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் முறையே ரூபா 600,000 மற்றும் ரூபா 300,000 ஆக இருந்ததுடன், காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் குறித்த இரண்டு ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 1,192,260 மற்றும் ரூபா 1,652,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முத்திரைக் கட்டணங்களுக்காக சீராக்கம் செய்யப்படாததன் காரணமாக திரண்ட நிதியம்

மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,944,260 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 02. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 2,709,124 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 794,018 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

----------------------------------

#### 2.2.1 வீத வரி

-----------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களின் குறிப்பான வருடாந்த பெறுமதி அடிப்படையில் வீதவரி வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 குத்தகை வாடகை

---------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான கலாவெ மாட்டிறைச்சிக்கடை மற்றும் கோழி இறைச்சிக் கடை என்பவற்றை மீளாய்வாண்டிற்காக குத்தகைக்கு எடுத்திருந்த இரண்டு குத்தகையாளரால் கொடுப்பனவை தவிர்ப்புச் செய்திருந்த ரூபா 331,317 தொகையான பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு எடுத்திருந்த 58 குத்தகையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 183,930 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்**

-------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,887,781 தொகையான நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,267,211 என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக சபைக்கு அறவிடப்பட வேண்டிய சரியான முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய்பபடாதிருந்ததுடன் நிலுவை முத்திரைக் கட்டணத் தொகையை அறவிடுவதற்காக சபையினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 ஏனைய வருமானம்**

---------------------------------

(அ) மீளாய்வாண்டின் இறுதி அளவில் 182 குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 190,685 தொகையான கழிவுப்பொருள் வரித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட வியாபார அறிவித்தல் பதாகைகளுக்கு அறவிடப்பட வேண்டிய வரித்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

-----------------------------------------------

(அ) புறநெகும செயற்திட்டத்தின் மூலம் 2014 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த 02 கணனிகள் மற்றும் துணைக் கருவிகளின் பெறுமதியினை இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 பிரதேச சபை பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதன் கீழ் மீளாய்வாண்டினுள் ரூபா 237,500 மற்றும் ரூபா 50,000 செலவிடப்பட்டு முறையே 341 கதிரைகளும் 04 மின்பிறப்பாக்கிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த உபகரணங்களை சபையின் களஞ்சியத்திற்கு பொறுப்பேற்றமைக்கான குறிப்பு இடப்பட்டிருக்கவில்லை. மேலும் 64,773 தொகையான 93 கதிரைகள் முற்றும் ரூபா 25,000 ஆன 02

மின்பிறப்பாக்கிகளையும் நலனாளிகளுக்கு பகிர்ந்தளித்தல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கக்கூடிய ஆகக்கூடிய கட்டுநிதி உச்சஎல்லை ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், அந்த எல்லையை விஞ்சி 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி விளையாட்டு விழாவொன்றிற்காக ரூபா 300,000 வழங்கப்பட்டிருந்ததுடன், இம்முற்பணத தொகையை 2016 மே 18 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புதிய சபை செயலகத்திற்கு ரூபா 614,872 தொகையான அலுவலக உபகரணங்கள் கொள்வனவின் போது அரசின் கொள்வனவு செயற்பாடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.2 போதியளவில் அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழக கலை விழாவிற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரமின்றி ரூபா 103,890 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 3.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

ரூபா 1,622,000 பெறுமதியான வாகனமொன்றும் 04 இயந்திர உபகரணங்களும் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்